தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (21.12.2023) சென்னை கலைவாணர் அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து நடைபெற்ற தினசரி நாளிதழ்கள், செய்தி தொலைக்காட்சிகள் மற்றும் பருவ இதழ்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு மாபெரும் சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாமினை தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

சென்னை கலைவாணர் அரங்கில்

பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

சென்னை, டிச. 22

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கான மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து தினசரி நாளிதழ்கள், செய்தி தொலைக் காட்சிகள் மற்றும் பருவ இதழ்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மைச் செய்தியாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம் மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், சிறுநீரகம், எக்கோ, இ.சி.ஜி. முழு இரத்த பரிசோதனை, காசநோய் கண்டறிதல் போன்ற பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டது. அதோடு மட்டுமல்லாது பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், இருதய மருத்துவம் என்று பல்வேறு வகையான மருத்துவ ஆலோசனைகளும் இங்கே வழங்கப்பட்டது. அந்த வகையில் இந்த மருத்துவ முகாம்கள் மூலம் 250க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

இச்சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாமினை தொடங்கி வைத்த பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்த தாவது:

பிரபல அப்போலோ மருத்துவ நிர்வாகம் இதை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த முகாமில் பங்கேற்கிற அனைவருக்குமே தனித்தனி பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு, அவர்களுக்கு இங்கே எந்த மாதிரியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறதோ, அதேபோல் எந்தமாதிரியான சிகிச்சைகள் அளிக்கப்படுகிறதோ இவைகள் அனைத்துமே குறிப்பிட்டு, அந்தப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு அவர்களிடத்திலேயே தரப்பட இருக்கிறது. தொடர்ச்சியாக, அவர்களுக்கு யாருக்காவது மேல் சிகிச்சை தேவைப்படுமானால், அப்போலோ நிர்வாகமே பொறுப்பேற்று அதை செய்யவும் இருக்கிறார்கள். அதற்கும் மேலே, நம்முடைய காப்பீட்டு திட்டத்தின் அடிப்படையிலும், தேவையான சிகிச்சைகளுக்கு அரசு உறுதுணையாக இருக்கிறது. அந்த வகையில், இந்த முகாம் என்பது பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, இந்த முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

அப்போலோ நிர்வாகத்தைப் பொறுத்தவரை, பத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் குழு இங்கு அமர்ந்திருக்கிறார்கள். அனைத்து வகையான ரத்தப் பரிசோதனைகளும் செய்யப்படவிருக்கிறது. கண் பரிசோதனை, பல் பரிசோதனை போன்றவைகளும் செய்யப்ப இருக்கிறது. மேல் சிகிச்சைகள் எதுவாக இருந்தாலும், தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டும் அவைகள் செய்யப்படவும் இருக்கிறது.

கேள்வி: திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் என்ன மாதிரியான முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கிறது? நீங்கள் அங்கு செல்லவிருக்கிறீர்களா?

அமைச்சர் மா.சுப்பி ரமணியன்: தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில், மிகப்பெரிய அளவிலான மழைப்பொழிவு என்பது மிகக் கனத்த மழை பொழிந்து பல்வேறு பாதிப்புகளை உண்டாக்கி இருக்கிறது. மழை பொழியத் தொடங்கிய உடனே. பெரிய அளவில் நீர் குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்து வருகிறது என்கின்ற அந்த செய்தியை கேள்விப்பட்டவுடனே, முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு உத்தரவிட்டு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சொன்னார்கள்.

அந்த வகையில், தூத்துக்குடி அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனை, ஒரு தாழ்வான பகுதியில் இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக அந்த மருத்துவமனைக்குள் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. நீர்வரத்து அதிகரிக்க தொடங்கிய உடனே மின்சார துண்டிப்பு ஏற்பட்டது. அங்கே பத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தார்கள். உடனடியாக இங்கிருந்து சம்பந்தப்பட்ட மருத்துவ கல்வி இயக்குனர் DME அவர்களை எப்படியேனும் நீங்கள் அங்கே போவதற்கு வழி இல்லை என்றாலும், எப்படியாவது ஜீப் அல்லது எதையாவது ஒரு வாகனத்தைப் பிடித்து அங்கே போக வேண்டும் என்று அவரை அறிவுறுத்தப்பட்டு, அவர் உடனடியாக களத்திற்கு சென்று விட்டார். அவரோடு தொடர்ந்து நாங்கள் தொடர்பில் இருந்தோம். அவர் சென்று அங்கு பார்த்தபோது, உடனடியாக அங்கே மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில், டீசல் வேண்டும் என்று சொல்லப்பட்டது. டீசலில் இருந்து அதற்கான சாதனங்களை இயக்கினால் மட்டுமே, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பவர்களை காப்பாற்றிட முடியும். அவர் உடனடியாக சமயோசிதமாக, IOCL நிர்வாகத்திடம் பேசி, டீசலை துரிதகதியில் வரவழைத்து, அன்றிலிருந்து இன்று வரை அதை தொடர்ச்சியாக இயக்கிக் கொண்டிருக்கிறார். அதனால், யாருக்கும் எந்த விதமான உயிர் பாதிப்பு என்பது அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இல்லாமல் இருந்தது.

அதேபோல, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை, சிறிய அளவில், ஒரு அடி அளவுக்கு தண்ணீர் தேக்கம் தொடங்கியது. உடனடியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவமனைக்கே வந்து அந்த நீரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு அங்கே நோயாளிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் மாவட்ட ஆட்சி நிர்வாகம் பார்த்துக் கொண்டது. அதுமட்டுமல்ல, 50க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் மழை நீர் புகுந்து விட்டது. அந்த மழை நீரை எல்லாம் பல்வேறு இடங்களில் மோட்டார்களை கொண்டு இறைக்கும் பணியும், தானாகவே அந்த நீர் வடியும் பணியும் நடைபெற்று இருக்கிறது. நேற்றைக்கு, நம்முடைய துறையின் செயலாளர் அங்கே சென்றிருக்கிறார்.

நாளை அதிகாலை நான் தூத்துக்குடிக்கு செல்லயிருக்கிறேன். இந்த நிகழ்வு அங்கே தொடங்கியதிலிருந்து அதாவது 17ஆம் தேதியிலிருந்து நேற்று இரவு வரை தொடர்ச்சியாக 190 நடமாடும் மருத்துவ வாகனங்களின் மூலம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு கொண்டிருக்கிறது. 190 வாகனங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்று நான்கு பணியிடங்களோடு அந்த வாகனங்களில் சென்று முகாம்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வோரு நாளும் இரண்டு அல்லது மூன்று இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும், 400 க்கும் குறையாமல், இந்த குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடியை பொறுத்தவரை, 66 வாகனங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. திருநெல்வேலியை பொறுத்தவரை, 57 வாகனங்களும், தென்காசியை பொறுத்தவரை, 35 வாகனங்களும், கன்னியாகுமரியை பொறுத்தவரை, 32 வாகனங்களும், ஆக மொத்தம் 190 மருத்துவ வாகனங்கள் இந்தப்பணியில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறது.

நேற்று இரவு வரை 1489 முகாம்கள் இந்த நான்கு மாவட்டங்களில் நடத்தப்பட்டு இருக்கிறது. இந்த 1489 முகாம்களிலும், 28 ஆயிரத்து 792 பேர் பல்வேறு பரிசோதனைகளுக்காகவும், நோய் பாதிப்புகளுக்காகவும் வந்திருக்கிறார்கள். இவர்களில் காய்ச்சல் பாதிப்பு என்று கண்டறியப்பட்டோர் 340 பேர், இருமல் மற்றும் சளி உபாதைகள் என்று கண்டறியப்பட்டோர் 572 பேர், இந்த 340 காய்ச்சல் பாதிப்பு உள்ளவர்களுக்கும், 572 சளி மற்றும் இருமல் பாதிப்பு உள்ளவர்களுக்கும் தொடர்ந்து சிகிச்சை அளிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைவரும் சிறப்பாக இருக்கிறார்கள்.

தொற்று நோய் எதுவும் பரவாமல் தடுக்கின்ற முயற்சியை துறை மிகச் சிறப்பாக ஈடுபட்டு அந்த பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். நான், நாளை காலை சென்று, இரண்டு, மூன்று நாட்கள் இந்த நான்கு மாவட்டங்களிலும் தங்கியிருந்து, தொடர்ந்து இந்த மருத்துவ முகாம்களை இன்னும் கூடுதலாக்குகின்ற பணியையும், ஒரு இயல்பு நிலைக்கு வரும்வரையில், அந்த நோய்த்தொற்றுகளிலிருந்து யாருக்கும் பாதிக்கப்படாத வகையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அங்கே முகாம்கள் கூடுதல் ஆக்குவதற்கும், இப்போது DPH, Secretary மற்றும் DMEம் அங்கே இருக்கிறார்கள், நாளை நானும் அங்கே செல்லவிருக்கிறேன்.

இந்த நிலையில் இன்னும் மருத்துவக் குழுக்கள் கூடுதலாக தேவைப்பட்டால், நாளை அங்கு சென்றதற்கு பிறகு பல்வேறு அக்கம் பக்கத்தில் இருக்கிற மாவட்டங்களிலிருந்து, மருத்துவக் குழுக்களை அங்கே வரவழைத்து அதற்கான பணிகளில் ஈடுபடுத்த செய்வோம்.

கேள்வி: மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனைகள் எல்லா இடங்களிலும் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதில் பத்திரிகையாளர்களுக்கு தனி வாய்ப்பாக முழு உடல் பரிசோதனை செய்ய முன்னுரிமை அளிக்கப்படுமா?

அமைச்சர் மா.சுப்பிரமணியன்: ஏற்கனவே பத்திரிகையாளர்களுக்கு என்று நம்முடைய காப்பீட்டு திட்டத்தில் இருக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். ஏற்கனவே, 72 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு முழுமையாக வருமான வரம்பே இல்லாமல் காப்பீட்டு திட்டத்தில் செயல்படுத்தப்படுவது தமிழ்நாட்டில் மட்டும் தான். அரசைப் பொறுத்தவரைக்கும், ஏதாவது பிரத்யேகமாக நீங்கள் எது கேட்டாலும் செய்து கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், முன்களப் பணியாளர்கள், எப்படி காவல்துறையினர் இருக்கிறார்களோ, தூய்மைப் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் இருக்கிறார்களோ, அது போல, பத்திரிகையாளர்களும் முன் களப்பணியாளர்கள். இவர்களுடைய உடல் நலனை பேணி பாதுகாப்பது என்பது அரசின் கடமை. எனவே, இது போன்ற, முழு உடல் பரிசோதனைகளுக்கு, எதிர்காலத்தில் அரசு மருத்துவமனைகளில் பிரத்யேகமாக முன்னுரிமை என்கின்ற வகையில் எதையெல்லாம் செய்ய முடியுமா அதை செய்வதற்கு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று செய்வோம்.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர் பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், பொது குழு உறுப்பினர்கள் முத்தமிழ்செல்வன் குமார் வழிகாட்டுதலின்படி கண்ணப்பாளையம் ஊராட்சி நியாயவிலைக்கடையில் புயல்–வெள்ள நிவாரணத் தொகை ரூ.6000 வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மு.ராஜாராமன், திருவள்ளூர் மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அயலக அணி அருணாச்சலம், துணை தலைவர் வார்டு உறுப்பினர் மணவாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதி ஊராட்சி ஏரிப் பகுதியில் வசிக்கும் இருளர் குடியிருப்பில் சமத்துவ கிறிஸ்துமஸ் விழா மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் புரிவு சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அப்பகுதி மக்கள் 100 பேருக்கு புத்தாடை மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன், இரா.நாகன் , பேரூராட்சி செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார், ஒன்றியக் குழு உறுப்பினர் சுகுணா சுந்தரராஜன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மானாம்பதி ராதா நடேசன், விசூர் மூர்த்தி, பெருநகர் மங்கள கௌரி வடிவேல், துணை தலைவர் தரணிபிரகாஷ், தக்கார் தாண்டவ மூர்த்தி, லோகுபவ்யா, உதயபாஸ்கர், பெருநகர் நாகராஜ், தினகரன் கண்டிகை லூர்துசாமி,பௌவுல், மைக்கேல்,ஜெம்ஸ், சகாயராஜ், இளைஞர் அணி பெ.பரணி, சரவணன், ஆதிநாராயணன், தமிழ்செல்வன், புருஷோத்தமன், மகேஷ், பால்பாண்டியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ஜோசப் டிரஸ்ட் ஆரோக்கியராஜ், மானாமதி கண்டிகை. பி.ஏ.தாமஸ் (மாவட்ட சிறுபான்மை நலபிரிவு துணை அமைப்பாளர்) ஆகியோர் செய்திருந்தனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. - காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

151 வது வார்டில் 2000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

துணை மேயர் மு. மகேஷ்குமார் - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை, டிச.22

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா. சுப்பிரமணியன் அறிவுருத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி,மண்டலம் XI, 151வது வார்டில் மிக்ஜாம் புயல் மற்றும் கன மழையினால் பாதிக்கப்பட்ட 2000 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (22.12.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும்,151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் வளசரவாக்கம் மண்டல அலுவலகம் (ஹோலிகிராஸ் மெட்ரிக் பள்ளி) அருகில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் திருபெருமந்தூர் நாடாளுமன்ற கழக குழுத்தலைவர் டி.ஆர். பாலு எம்.பி, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு. மகேஷ்குமார், மண்டலம்XI குழுத் தலைவர் நொளம்பூர் வே. ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

ஆகவே இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி கள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. புத்தாடைகள் - உணவு வழங்கினார்

உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதியில் கிறிஸ்துமஸ் விழா!

ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் - கழகத்தினர் பங்கேற்பு

காஞ்சிபுரம், டிச. 22 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதியில் மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு புத்தாடை மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இதில் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் கலந்து கொண்டார்.

திராவிட மாடல் நல்லாட்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மானாம்பதி ஊராட்சி ஏரிப் பகுதியில் வசிக்கும் இருளர் குடி யிருப்பில் சமத்துவ கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளரும் சட்ட மன்ற உறுப்பினருமான க.சுந்தர் கலந்து கொண்டு அப்பகுதி மக்கள் சுமார் 100 பேருக்கு புத்தாடை மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன், இரா.நாகன் , பேரூராட்சி செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார் , ஒன்றியக் குழு உறுப்பினர் சுகுணா சுந்தரராஜன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மானாம்பதி ராதா நடேசன், விசூர் மூர்த்தி, பெருநகர் மங்கள கௌரி வடிவேல், துணை தலைவர் தரணிபிரகாஷ், தக்கார் தாண்டவ மூர்த்தி, லோகுபவ்யா, உதயபாஸ்கர், பெருநகர் நாகராஜ், தினகரன் கண்டிகை லூர்துசாமி, பௌவுல், மைக்கேல், ஜெம்ஸ், சகாயராஜ், இளைஞர் அணி பெ.பரணி, சரவணன், ஆதிநாராயணன், தமிழ்செல்வன், புருஷோத்தமன், மகேஷ், பால்பாண்டியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ஜோசப் டிரஸ்ட் ஆரோக்கியராஜ், மானாம்பதி கண்டிகை. பி.ஏ.தாமஸ் (மாவட்ட சிறுபான்மை நல பிரிவு துணை அமைப்பாளர்) ஆகியோர் செய்திருந்தனர்.

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. - மேயர் ஆர்.பிரியா முன்னிலையில்

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி 72வது வார்டில் நிவாரணப் பொருட்கள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச. 22-

திரு.வி.க. நகர் தொகுதியில் மேயர் பிரியா, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. முன்னிலையில் 72-வது வார்டில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு மழை நிவாரண பொருட்களை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட திரு.வி.க. நகர் வடக்கு பகுதி 72 வது வார்டு நரசிம்மன் நகர் பகுதியில் உள்ள நரசிம்மன் நகர் முதல் தெரு, இரண்டாவது தெரு, மூன்றாவது தெரு, நரசிம்மன் நகர் குறுக்கு தெரு, நான்காவது தெரு, நாகத்தம்மன் கோயில் பகுதியில் உள்ள குடியிருப்பு, உள்ளிட்ட மக்களுக்கு அரிசி, பெட்ஷீட் ,பால், ரொட்டி, பிஸ்கட், ரஸ்க், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரன பொருட்களை மேயர் பிரியா, கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாய கம்கவி, பகுதி கழக செயலாளர் செ. தமிழ் வேந்தன், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சரவணண், வட்ட கழக செயலாளர்கள் எம்.இசட். அபாய், எம்.ஏ. டீக்கா, முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வேலு, சிவ ஜானி, ருக்மணி, எ.சேகர், இளைஞரணி அமைப்பாளர் மணிமாறன், வழக்கறிஞர் அரவிந்தன், கிரிதரன், வழக்கறிஞர் ஜி.சங்கர், யுவராஜ், ஜெய்சிங் உள்ளிட்ட கழகத்தோழர்கள் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டி.டி. தணிகாசலம்
டிசம்பர் 22 (2009)

குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.

1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்திரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.

கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.